ॐ श्री गुरुभ्यो नमः

# இந்திய வரலாற்றின் சொல்லப்படாத கதை

## பிரிட்டிஷார் ஆட்சியில் நிகழ்ந்த பஞ்சங்கள் (வறட்சிகள்)

*டாக்டர் ஜெயகுமார் S. அம்மங்குடி*

(jayakum108@gmail.com)

[*ஆங்கிலத்திருந்து தமிழாக்கம் செய்தது* - N.*ராமச்சந்திரன்*]

---

*பிரிட்டிஷார் ஆட்சியில், இந்தியாவில், 5 கோடிக்கும் மேலாக மக்கள் பஞ்சத்தால் இறந்தார்கள். ஆனாலும் பல உயர்நிலைப் பள்ளிப் பாடபுத்தகங்களில் இதைப்பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. அப்படியே சொன்னாலும், "ஆயிரக்கணக்கான" மக்கள்தான் இறந்தார்கள் என்று கூறப்படுகிறது. இத்தகைய அபாண்டமான பொய்யை நாம் திருத்தி எழுதவேண்டும்.*

---

ஒரு மாநில அரசாங்கத்தின் பாடத்திட்டக் குழு, 6, 7 மற்றும் 8-வது வகுப்பின் சமூக அறிவியல் பாடங்களை மறுஆய்வு செய்யுமாறு எங்கள் குழுவைப் பணித்தது. பொருளடக்கத்தில் நிறைய மாறுதல்களை நாங்கள் பரிந்துரை செய்தோம். அந்த யோசனைகளில் சுமார் பாதியை அந்த மாநில அரசாங்கம் ஏற்றுக்கொண்டு மாற்றினார்கள். ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

ஜமீன்தாரி முறையை பற்றி, 8-ஆம் வகுப்பு பாடப்புத்தகத்திலிருந்து [1] கீழ்க்கண்டவை எடுக்கப்பட்டிருக்கிறது.



**நிரந்தர நிலவரித்திட்டம் : ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்கள்.**

இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆதிக்கம் பெற்றவுடன் அவர்கள் நிலவரிகளை அதிகமாக்கியது மட்டுமின்றி போர்களிலும் வணிகத்திலும் முதலீடு செய்யவும் முனைந்தனர். இதனால் விவசாயிகள் இந்நிலையில் தொழில் செய்ய முடியாத அவலநிலை ஏற்பட்டது. அக்காலத்தில் ஏற்பட்ட வறட்சியால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். அந்த நேரத்தில் ஆங்கிலேய அரசு விவசாயத்தை ஊக்குவிக்க நிலவரி முறையை கொண்டுவ

பிரிட்டிஷாரின் கொள்கைகள் நம்முடைய விவசாய முறைகளை அழித்தது உண்மைதான். ஆனாலும் "**அக்காலத்தில் ஏற்பட்ட வறட்சியால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்**" என்னும் வரிகளில் கவனம் செலுத்துவோம்.

ஒரு வறட்சி அல்லது பஞ்சம் என்பது உணவுப் பொருட்கள், குறிப்பாக தானியங்கள் கிடைப்பது மிக அரிதான ஒரு நிலையாகும். நம்மில் பலருக்கு இந்த வறட்சி அனுபவம் இருக்காது. ஏனெனில் கடைசியாக நிகழ்ந்த பஞ்சம் 1943-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. ஆயினும், இந்தியாவில் காலனி ஆதிக்கத்தின்போது நிகழ்ந்த பஞ்சங்களைப் பற்றி நிறைய ஆராய்ச்சிகள் நடந்திருக்கின்றன.

*லேட் விக்டோரியா காலத்து பேரழிவுகள்* [2] என்னும் முக்கியமான புத்தகத்தில் மைக் டேவிஸ் என்பவர் பிரிட்டிஷார் ஆட்சிக்கு முந்தைய 2000 வருடங்களில் 17 பஞ்சங்கள் வந்தன என்று குறிப்பிட்டுள்ளார் என்னும் விஷயத்தை ஃபிரெட் மேக்டாஃப் என்பவர் சுருங்கச் சொல்லியிருக்கிறார் [3]. ஆனால், ஒப்பிட்டுப் பார்க்கையில், 120-வருட பிரிட்டிஷார் ஆட்சியில் 31 மோசமான பஞ்சங்கள் நிகழ்ந்தன. பின்னாளில் மூன்றாவது உலகம் என்று அறியப்பட்ட, பின்தங்கிய மேம்பாடுகளுக்கு வித்திட்டது இந்த மன்னராட்சியில்தான் என்று டேவிஸ் கூறுகிறார். முதலாளித்துவ நவீனப்படுத்துதலுக்கு கொடுத்த விலை, லட்சக்கணகான விவசாயிகளின் உயிர்தான். இந்தியாவில் பஞ்சத்தை தோற்றுவிக்கச் செய்த பிரிட்டிஷாரின் பங்கைப் பற்றி நாம் புரிந்து கொள்வோம்.

பிரிட்டிஷார் ஆட்சியின்போது நிகழ்ந்த மிகப்பெரிய பஞ்சங்களின் பட்டியல் [4] கீழே உள்ளது.

| வருடம் | பெயர் | நிகழ்ந்த பகுதி | இறந்தவர் எண்ணிக்கை | விளக்கம் |
|---|---|---|---|---|
| **1769-70** | மிகப்பெரும் வங்காளப் பஞ்சம் | பீஹார், வடக்கு மற்றும் மத்திய வங்காளம் | 1 கோடி | அப்போதைய வங்காள ஜனத்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பங்கு |
| **1783-84** | சாலிஸா பஞ்சம் | டெல்லி, உத்தரப் பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான், காஷ்மீர் | 1.1 கோடி | கடுமையான பஞ்சம். பல பகுதிகளில் ஜனத்தொகையே அழிந்து விட்டது |
| **1791-92** | டோஜி பாரா பஞ்சம் அல்லது மண்டையோட்டுப் பஞ்சம் | ஹைதராபாத், மத்திய இந்தியா, டெக்கான், குஜராத், தெற்கு ராஜஸ்தான் | 1.1 கோடி | நிகழ்ந்த பஞ்சங்களிலேயே மிக மோசமான பஞ்சம். மிகப் பெரிய அளவில் மக்கள் இறந்ததால் அவர்களை எரிக்கவோ புதைக்கவோ முடியவில்லை |
| **1860-61** | மேல்பக்கமான டோப் | ராஜஸ்தான் | 2 கோடி | |
| **1865-67** | ஒரிஸ்ஸா பஞ்சம் | பீஹார், ஒரிஸ்ஸா, தென்னிந்தியாவின் சில பகுதிகள் | 1 கோடி | இந்தியாவிற்கான பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி லார்டு சாலிஸ்பரி ஒன்றுமே செய்யாமல் காலம் தாழ்த்தியதால், 1 மில்லியன் மக்கள் இறந்தனர் |
| **1868-70** | ராஜ்புதானா பஞ்சம் | ராஜஸ்தான் | 15 லட்சம் | |
| **1876-78** | மிகப்பெரிய மெட்ராஸ் பஞ்சம் | மைசூர் மற்றும் ஹைதராபாத் மாநிலங்கள் (மெட்ராஸ் மாகாணம்) | 60 லட்சம் - 1 கோடி | |
| **1896-97** | இந்தியப் பஞ்சம் | ராஜஸ்தான், மத்திய இந்தியாவின் சில பகுதிகள் மற்றும் ஹைதராபாத் | 50 லட்சம் | |
| **1943-44** | வங்காளப் பஞ்சம் | வங்காளம் | 36 லட்சம் | 15 லட்சம் மக்கள் பட்டினிச்சாவு. 21 லட்சம் மக்கள் தொற்று நோயால் இறந்தார்கள் |

W.ஹன்டர் என்பவர் எழுதிய 1883 கிராமப்புற வங்காளம் [5] என்னும் புத்தகத்தில், 1770-ஆம் ஆண்டு நிகழ்ந்த பஞ்சத்தின் கோரதாண்டவம் பற்றி விரிவாக எழுதுகிறார். “1770-ஆம் ஆண்டின் மோசமான வெயில் காலத்தில், மக்கள் இறந்துகொண்டே இருந்தார்கள். குடியானவர்கள் தங்களுடைய கால்நடைகளை விற்கிறார்கள்; விவசாயக் கருவிகளையும் விற்கின்றனர்; விதை தானியங்களையும் உண்டனர்; அவர்களுடைய மகன்களையும் மகள்களையும் விற்றனர்; இனிமேல் குழந்தைகளை வாங்குவதற்கு ஆளில்லை என்னும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். மரத்தில் இலைகளையும் புற்களையும் உண்டனர்; மற்றும் 1770-ஆம் ஆண்டில், தர்பாரில் இருந்த குடியுரிமையாளர்கள் இறந்தவர்களின் உடல்களை உயிருள்ளவர்கள் உண்கிறார்கள் என்று உறுதி செய்தார்கள். இரவும் பகலும் பட்டினியோடும் வியாதிகளோடும் மக்கள் நகரங்களுக்குள் நுழைந்தார்கள்...தொற்று நோய் பரவியது..... மூர்ஷெதாபாதில் பெரியம்மை நோய் வந்தது..... இறந்துகொண்டிருப்பவர்கள் மற்றும் இறந்தவர்கள், கொத்துக் கொத்தாய் சாலையில் வீழ்ந்து கிடந்தார்கள்....பிணந்தின்னி நாய்களும் நரிகளும்கூட அவர்கள் வேலையை சரிவரச் செய்யவில்லை...சாலைகளில் கிடந்த பிணங்களால் நகரத்து மக்களின் வாழ்க்கையே கேள்விக்குறியானது... வீடும் இல்லாமல், பசியோடு இருந்த மக்கள் உணவைத்தேடி கிராமம் கிராமமாக சென்றார்கள்...அல்லது மழைக்கு ஒதுங்க இடம் தேடினார்கள்...நாடு முழுவதும் தொற்று நோய் பரவியது..லட்சக்கணக்கான மக்கள் என்றாவது ஒரு நாள் விடிவு கால வரும் என்ற நம்பிக்கையில் உயிர் துறந்தார்கள்....”

ஒரு பத்து மாதகாலத்தில் வங்காளத்தின் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு பேர் பட்டினியால் இறந்தார்கள். 1865-66 ஆம் ஆண்டில் ஒரிஸ்ஸாவை வரட்சி தாக்கியது. பிரிட்டிஷார் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தார்கள்






**1877 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களின் புகைப்படம்[4]; பெல்லாரியில் (மிகப்பெரும் பஞ்சம் 1876-78) நிவாரணப் பொருட்கள் வினியோகம்[4].**

பிரிட்டிஷார் 1939-45 காலகட்டத்தில் (இரண்டாம் உலகப் போர்) நடந்து கொண்ட விதம் பற்றி அறிந்து கொள்ள நல்ல புத்தகம், மதுஸ்ரீ முகர்ஜி என்பவர் எழுதிய “சர்ச்சிலின் இரகசியப் போர்” [6] என்னும் புத்தகம். அதில் சர்ச்சில் 20-ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய கதாநாயகன், மிகப் பெரிய வில்லனாகவும் இருக்கிறார் என்று சித்தரிக்கிறார். இந்தியாவிற்கு மேலும் அதிக தானியங்கள் வேண்டும் என்று கேட்டபோது, அவர் “எனக்கு இந்தியர்களைக் கண்டாலே பிடிக்காது. ஒரு மிருகத்தனமான மதத்தை பின்பற்றும் மிருகத்தனமான மனிதர்கள். முயல் குட்டிகள் போல குழந்தைகளை பெற்றால் பஞ்சம் ஏன் வராது?” கொடூரமான பேரழிவைப்

பற்றியும் மக்கள் அதிகப்படியாக இறந்ததைப் பற்றியும் டெல்லி அரசாங்கம் அவருக்கு தந்தி அனுப்பியபோது, “ஏன் இன்னும் (மகாத்மா) காந்தி சாகவில்லை?” என்று கேட்டார்.




**பிணங்களின் மேல் கழுகுகள் வட்டம் அடிக்கின்றன; ஒரு பெண் சாலையில் உள்ள தானியங்களைப் பொறுக்குகிறார் (வங்காளம் 1943) [7]**

பாதிப்பின் அளவை எப்படி உணர்வது? நவம்பர் மாதம் 2018-இல் அடித்த கஜாப் புயலால், 500,000 குடும்பங்களின் வாழ்வாதாரம் அழிந்துவிட்டது. தென்னை, முந்திரி மற்றும் மாமரங்கள் கீழே சாய்ந்துவிட்டன. சுமார் 40 பேர் உயிரிழந்தார்கள். 2004-ஆம் ஆண்டு வந்த சுனாமி. 14 நாடுகளில் 230,000 உயிர்களை பலி வாங்கியது. காலனி ஆட்சியில் நிகழ்ந்த பஞ்சங்களினால் 5 கோடி இந்தியர்கள் மடிந்தனர். இந்த பேரழிவு ஒப்பிடமுடியாதது.

இப்போது இந்தியா என்ன செய்யலாம்? இந்தியப் பாடப் புத்தகங்களில் பிரிட்டிஷாரின் கொடூரமான செயல்களை சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவு படுத்த வேண்டும். ஏனெனில் இவை நமது வரலாற்று உண்மைகள். எங்கள் குழு இந்த விமரிசனத்தை அனுப்பியபின், மாநில பாடப்புத்தகக் குழு “**ஆயிரக்கணக்கான**” என்றிருந்த சொல்லை “**கோடிக்கணக்கான**” [1] என்று மாற்றினார்கள். இது வரவேற்கத்தக்கது என்றாலும், இந்த வரிகள் பிரிட்டிஷார் ஆட்சியில் இந்தியாவிற்கு பல நன்மைகள் விளைந்தன என்னும் தோற்றத்தை ஏற்படுத்துகின்றன. இந்தப் பார்வையை முற்றிலும் நிராகரிக்கப்பட்டு, பிரிட்டிஷாருக்கு இந்தியாவின் நலனில்


நிரந்தர நிலவரித்திட்டம் : ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்கள்.

இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆதிக்கம் பெற்றவுடன் அவர்கள் நிலவரிகளை அதிகமாக்கியது மட்டுமின்றி போர்களிலும் வணிகத்திலும் முதலீடு செய்யவும் முனைந்தனர். இதனால் விவசாயிகள் இந்நிலையில் தொழில் செய்ய முடியாத அவலநிலை ஏற்பட்டது. அக்காலத்தில் ஏற்பட்ட வறட்சியால் கோடிக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். அந்த நேரத்தில் ஆங்கிலேய அரசு விவசாயத்தை ஊக்குவிக்க நிலவரி முறையை கொண்டுவ

அக்கறையில்லை என்று மாற்றி எழுதப்பட வேண்டும்!

மேற்கத்திய நாடுகளிலிருந்தும் நாம் கற்றுக் கொள்ளலாம். உதாரணமாக, யூதர்களின் பேரழிவை (1941-45 ஆம் ஆண்டுகளில் சுமார் 60 லட்சம் யூதர்கள் கொல்லப்பட்டனர்) நினைவுகூறும் வகையில். அமெரிக்காவில் ஒரு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க பேரழிவு அருங்காட்சியகம் என்ற பெயரில் வாஷிங்டன் டிசி யில் இது அமைக்கப்படிருக்கிறது. இது தவிர பள்ளிக்குச் செல்லும் எல்லா குழந்தைகளுமே இந்தப் பேரழிவைப் பற்றி தெரிந்து கொள்கிறார்கள்.





**நாசி பேரழிவு போது பயன்படுத்தப்பட்ட மிக மோசமான விஷ வாயு அறைகள் [8]; அமெரிக்காவில் உள்ள பேரழிவு அருங்காட்சியகம். [9]**

மேற்கு வங்கம் மற்றும் இதர இடங்களில் அந்த கொடுங்கோலாட்சியில் எவ்வளவு பேர் கொல்லப்பட்டார்கள் என்பதை காட்டும் வகையில் நினவுச் சின்னங்கள் அமைக்கப்பட வேண்டும். முதலாம் உலகப்போரிலும் (4 கோடி) இரண்டாம் உலகப் போரிலும் (6 கோடி) இறந்த மக்களின் எண்ணிகையைப் போலவே இந்த கொடுங்கோலாட்சியிலும் மக்கள் இந்தப் பேரழவினால் கொல்லப்பட்டனர்.

அதிகப்படியாகவும் மிக மோசமாகவும் பஞ்சங்கள் பிரிட்டிஷார் ஆட்சியில் வருவதற்கு என்ன காரணங்கள்? எதிர்வரும் கட்டுரைகளில் அது பற்றி விவாதிப்போம்.

குறிப்புகள்:


[1] Social Studies, Class VIII, Hyderabad: SCERT, Telangana, 2018.

[2] M. Davis, Late Victorian Holocausts: El Niño Famines and the Making of the Third World, Verso Books, 2017.

[3] F. Magdoff, "Late Victorian Holocausts: El Niño Famines and the Making of the Third World.

By Mike Davis 2001. Verso, London and New York," *Renewable Agriculture and Food Systems,* vol. 20, pp. 190-192, 2007.

[4] "Timelines of Major Famines in India during British Rule," [Online]. Available: https://en.wikipedia.org/wiki/Timeline_of_major_famines_in_India_during_British_rule.

[5] W. W. Hunter, "Annals Of Rural Bengal," vol. 1, 1883.

[6] M. Mukerjee, Churchill's Secret War: The British Empire and the Ravaging of India during World War II, India Penguin, 2018.

[7] "Bengal famine of 1943," [Online]. Available: https://en.wikipedia.org/wiki/Bengal_famine_of_1943.

[8] "https://en.wikipedia.org/wiki/Responsibility_for_the_Holocaust," [Online].

[9] G. Will, "A showcase of the vilest and noblest manifestations of humanity," 26 April 2018. [Online]. Available: http://www.jewishworldreview.com/cols/will042618.php3.